**புதுக்கோட்டை நகராட்சி**

**புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டுள்ள அவசர மன்ற பொருள்கள்**

**நாள்.04.07.2018**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | 1. Resolved that Pudukkottai Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs. 6.00 Crore (Rupees six crore only) from TUFIDCO for provision of Internal plumbing for HSC (Minimum 8350 Nos.) for making optimum utilization of UGSS at Pudukkottai Municipality ‘ under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.<br><br>2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Pudukkottai Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Pudukkottai Municipality.<br><br>3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.<br><br>4. Resolved to adhere to time line as envisaged DPR.<br><br>5. Resolved that Pudukkottai Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Pudukkottai Municipality’s annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund. | **தீர்மானம் எண்–815**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>6. Resolved that Pudukkottai Municipality is authorizing the authorized signatory to open and operate as ESCROW account for UGSS in favor of TUFIDCO till the repayment of loan. ( Roc.No.14182/02/E1 )<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..2</td>
<td>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018ல் 2018–2019ம் ஆண்டு தமிழ்நாடு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (TURIP) சாலை அமைக்கும் பணிக்கு 12.05.2018 அன்று அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற TURIP 2018–2019–க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் புதுக்கோட்டை நகராட்சிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்தும், மேற்காணும் நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்ட மதிப்பீடு தொகைக்கு மன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br>(ரூ.கோடியில்)
<table>
<tr><th>நகராட்சியின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி</th><th>மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி</th><th>மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி</th><th>நகராட்சி பங்களிப்பு</th></tr>
<tr><td>புதுக்கோட்டை</td><td>5.00</td><td>1.90</td><td>1.50</td><td>1.10</td><td>0.50</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அனுமதிக்கப்பட்ட தொகையினைவிட கூடுதலாக வரும் தொகை ரூ.50.00 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.5003/2018/இ1 )</td>
<td><u>தீர்மானம் எண்–816</u><br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்..3</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் மேற்கு பகுதியில், மேல் மாடியின் தென்பகுதியில் உள்ள சுமார் 753 ச.அடி கொண்ட காலி அறையில் புதுக்கோட்டையில் சுமார் 43 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய பணியாற்றி வரும் கம்பன் கழகத்திற்கு வாடகை அடிப்படையில் மாதாந்திர குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதி கோரி மேற்படி கம்பன் கழக நிர்வாகத்தினர்களால் 02.06.2018–ம் தேதியிட்ட விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>அ) நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்துநிலையம் மேற்கு பகுதியில் மேல் மாடியின் தென்பகுதியில் சுமார் 753 ச.அடி கொண்ட அறையில் ஏற்கனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இலவசமாக பாதாள சாக்கடைத்திட்டத்திற்காக செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி அலுவலகம் இடம் மாறுதல் காரணமாக காலி செய்துவிட்ட நிலையில் நகராட்சி நிதி நிலைமையை மேம்படுத்தும் நோக்கத்துடனும், புதுக்கோட்டை மாவட்டத்தில் தாய்மொழி தமிழை வளர்க்கும் நோக்கத்துடன் இலக்கிய பணி ஆற்றி வரும் கம்பன் கழகத்திற்கு வைப்புத்தொகை ரூ1.00.000/– பெற்றும், தற்போதைய சந்தை மற்றும் வாடகை மதிப்பீட்டின்படி, மாதாந்திர குத்தகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மாதாந்திர வாடகையாக ரூ.4000/–நிர்ணயித்தும், நகராட்சி குத்தகை இன சட்ட விதிகளுக்குட்பட்டும், நிபந்தனைகளுக்குட்பட்டும் குத்தகை உரிமம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க. எண். 5829 / 2018 / அ4)</td>
<td><u>தீர்மானம் எண்–817</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2018–2021 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் ஒப்படைக்கப்படும் நாள் முதல் 31.03.2019 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 12.06.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டாண்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">உரிம இனம்</th><th rowspan="2">ஏலம் கோரியவர் / ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி</th><th colspan="2">உயர்ந்த பட்ச</th></tr>
<tr><th>ஏலக்கேள்வி (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td>இனம் எண் – 7 புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டாண்டில்</td><td>1.திருமதி. M. பத்மா,<br>க/பெ. RA. முருகேசன்.<br>No. 7110, மாரியம்மன் கோவில் தெரு,திருக்கோகர்ணம்,</td><td>–</td><td>15,05,000/–</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மானம் எண்–818</u><br>அலுவலக குறிப்பு அ, ஆ ம இ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td rowspan="2">கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td><td>புதுக்கோட்டை.</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>2.திரு. S. அருண்பிரசாத்.<br>த/பெ சுப்பையா,<br>TSNo. 4209, KLKS நகர்<br>புதுக்கோட்டை.</td><td>–</td><td>14,50,000/–</td></tr>
</table>
அலுவலக குறிப்பு.<br><br>
அ) இனம் எண் – 7, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டாண்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண். 1ல் திருமதி.M.பத்மா, க/பெ.RA. முருகேசன். No. 7110, மாரியம்மன் கோவில் தெரு,திருக்கோகர்ணம், புதுக்கோட்டை என்பவர் ரூ. 15.05,000/– ( ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும் ) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு நகராட்சி வசூல் குத்தகை தொகை ரூ. 10,71,891/–ஐ காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.12,98,316/–காட்டிலும் கூடுதலாகவும் உள்ளது.<br><br>
ஆ) புதிய பேருந்து நிலைய சைக்கிள் ஸ்டாண்டில் கடந்த 02.10.2015 ம் தேதி முதல் நாளது தேதிவரை துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு நகராட்சி மூலம் இரண்டு பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. அவர்களுக்கு முறையே மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.50,000/– வீதம் வருடத்திற்கு ரூ. 6,00,000/– செலவாகிறது. மேற்படி பணிக்கு சீட்டுகள் அச்சடித்தல் மற்றும் மின்சார செலவுகளை கணக்கீடு செய்தால், வருவாய் குறைவாக கிடைக்கிறது. மேலும், துறை மூலம் வசூலிப்பதை விட பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்கு விடுவதால், நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளது.<br>
இ) எனவே, இந்த ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகை சென்ற ஆண்டு குத்தகை தொகையை காட்டிலும் கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரி தொகையை காட்டிலும் கூடுதலாகவும் உள்ளதால், வரிசை எண் – 1ல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் திருமதி. M. பத்மா, க/பெ R.A. முருகேசன் என்பவருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
( ந.க.எண். 18673/2017/அ4 )
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..5</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2018–2021 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 12.06.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் நகராட்சி லாரி மார்க்கெட்டில் உள்ள எடை மிஷின் மூலம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மானம் எண்–819</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| வ. எண் | உரிம இனம் | ஏலம் கோரியவர் / ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த பட்ச | |
|---|---|---|---|---|
| | | | ஏலக்கேள்வி (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூபாயில்) |
| 1. | இனம் எண் – 20 நகராட்சி லாரி மார்க்கெட்டில் உள்ள எடை மிஷின் மூலம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1.திரு. R. கோபிநாத், த/பெ. K. இராமதாஸ். No.2, சிவானந்தபுரம் 3ம் வீதி, மச்சுவாடி,புதுக்கோட்டை. | – | 50,100/– |
| | | 2.திரு. S. குணசேகரன், த/பெ K. சுப்பையா, 915, பெரியார் நகர்,புதுக்கோட்டை. | – | 45,000/– |

அலுவலக குறிப்பு.

இனம் எண் – 20 , நகராட்சி லாரி மார்க்கெட்டில் உள்ள எடை மிஷின் மூலம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண். 1ல் கண்டுள்ள திரு. R. கோபிநாத், த/பெ. K. இராமதாஸ், No.2, சிவானந்தபுரம் 3ம் வீதி, மச்சுவாடி, புதுக்கோட்டை என்பவர் ரூ.50,100/–( ரூபாய் ஐம்பதாயிரத்து நூறு மட்டும் ) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.( ந.க.எண். 18673/2017/அ4 )

**ஓம்.ஜி.சுப்பிரமணியன்**
**தனி அலுவலர்**
**மற்றும் நகராட்சி ஆணையர்(பொ)**
**புதுக்கோட்டை நகராட்சி**

புதுக்கோட்டை நகராட்சி

புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டுள்ள இயல்புக்கூட்ட மன்ற பொருள்கள்

நாள்.24.07.2018

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் ஜுன்–2018 மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது,<br>**அலுவலக குறிப்பு பதிவு செய்யலாம்** | **தீர்மானம் எண்–820**<br>அலுவலக குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..2 | புதுக்கோட்டை நகராட்சி 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,43,748 மக்கள் தொகை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். நகரப்பகுதி 42 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட புதுக்கோட்டை நகருக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினசரி 120.00 இலட்சம் லிட்டர் (12.00 MLD) குடிநீரும், நகராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் அம்மையாப்பட்டி குடிநீர்த்திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு 10.00 இலட்சம் லிட்டர் (1.00 MLD) குடிநீர் ஆகமொத்தம் 130.00 இலட்சம் லிட்டர் (13.00 MLD) நீர் பெறப்பட்டு 27 வார்டுகளுக்கு தினந்தோறும், மீதம் உள்ள 15 வார்டுகளுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. மேலும் இந்நகராட்சியில் மொத்தமுள்ள 39097 கட்டிடங்களில் 34782 எண்ணிக்கையில் சொத்துவரி விதிக்கப்பட்டு அனைத்து குடியிருப்புகளுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் குடிநீர் திட்டத்தின்கீழ் குழாய் இணைப்புகள் வழங்கிட ஏதுவாக ரூ.410.00 இலட்சத்தில் 11916 இணைப்புகள் வழங்கும் பணிக்காக சென்னைTUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ.410.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>மேலும் 29.06.2018 அன்று நடைபெற்று ஆய்வுக்கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் | **தீர்மானம் எண்–821**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

கூடிய விநியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும், இதற்கான செலவினத்தை Project Development Grant Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.19964/2009/இ3)

பொருள் எண்..3

இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 03.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.12 மச்சுவாடி துப்புரவு பணியாளர் குடியிருப்பு சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.70 | ஆர். கோபிநாத் | 681188.00 | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | எஸ். குணசேகரன் | 693260.00 | மதிப்பீட்டை விட 1.71% அதிகம் |
| 2) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.12 மச்சுவாடி துப்புரவு பணியாளர் குடியிருப்பு சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.10 | ஆர். கோபிநாத் | 626968.00 | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | எஸ். குணசேகரன் | 637645.00 | மதிப்பீட்டை விட 1.65% அதிகம் |
| 3) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.12 மச்சுவாடி துப்புரவு பணியாளர் குடியிருப்பு 1ம் வீதியில் சாலையில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.31 | ஆர். கோபிநாத் | 557276.00 | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | எஸ். குணசேகரன் | 563880.00 | மதிப்பீட்டை விட 1.16% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின்

**<u>தீர்மானம் எண்–822</u>**

அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr><td></td><td>ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>( ந.க.எண்.5560/2018/இ1 )</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..4</td><td>இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 05.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சதில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.38 காவல் துறை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்தின் பின்புறத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல்</td><td rowspan="2">2.05</td><td>கே. பரமசிவம்</td><td>177960.00</td><td>மதிப்பீட்டை விட 0.03% குறைவு</td></tr>
<tr><td>ஆர். மணிகண்டன்</td><td>180858.00</td><td>மதிப்பீட்டை விட 1.58% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2)</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சி காவல் துறை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்தின் முன்புறத்தில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்தல்</td><td rowspan="2">1.78</td><td>கே. பரமசிவம்</td><td>155047.00</td><td>மதிப்பீட்டை விட 0.04% குறைவு</td></tr>
<tr><td>ஆர். மணிகண்டன்</td><td>157301.00</td><td>மதிப்பீட்டை விட 1.40% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :–<br>
1. மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.4097/2018/இ</td><td><u>தீர்மானம் எண்–823</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..5</td><td>இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 13.06.2018 அன்று</td><td><u>தீர்மானம் எண்–824</u></td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 முதல் 21 வரை குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான இடங்களில் special மற்றும் gatevalue மாற்றுதல் | 1.05 | பி. நாகராஜன் | 64374.00 | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | எம். ஜம்புலிங்கம் | 65384.00 | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 2) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 சமுத்துவபுரம் காலனியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1.39 | பி. நாகராஜன் | 121776.00 | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | எம். ஜம்புலிங்கம் | 123996.00 | மதிப்பீட்டை விட 1.76% அதிகம் |
| 3) | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.1 தந்தைபெரியார் நகர் 7ம் வீதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 0.88 | பி. நாகராஜன் | 76280.00 | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| | | | எம். ஜம்புலிங்கம் | 78056.00 | மதிப்பீட்டை விட 2.24% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1581/2018/இ1)
</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..6</td>
<td>
இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப் பட்டுவரும்,கைத்தள்ளுவண்டிகள் (Push cart) பழுது ஏற்பட்டுள்ளதால் கைத்தள்ளு வண்டிகளில் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்க இயலவில்லை. மேற்படி கைத்தள்ளுவண்டிகள் பழுதுகள் சரி செய்ய 24.04.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | வைப்புத்தொகை |
|---|---|---|---|
</td>
<td>

<u>**தீர்மானம் எண்–825**</u>

அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.
</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>M. ஜம்புலிங்கம்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>354, கீழ 4ம் வீதி,<br>புதுக்கோட்டை.</td><td>Rs. 4950/-</td><td>CH.No : 950636<br>Date : 24.04.2018.<br>Rs : 6000/-</td></tr>
<tr><td>2.</td><td>P. நாகராஜன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>15, ராம்நகர்,<br>புதுக்கோட்டை.</td><td>Rs. 5250/-</td><td>CH.No : 684146<br>Date : 24.04.2018.<br>Rs :6000/-</td></tr>
</table>
வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.<br><br>
அலுவலகக்குறிப்பு..<br><br>
1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. M. ஜம்புலிங்கம், நகராட்சி ஒப்பந்ததாரர்,ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
2. திடக்கழிவு மேலாண்மை பொதுசுகாதாரம் அவசியம் அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. M. ஜம்புலிங்கம், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
( ந.க.எண்.10798/2017/எச்4 )
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..7</td>
<td>புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெறும் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டு உள்ளது பற்றிய அறிவிக்கையினை தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.21840/—க்கான தொகைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக்கட்டணம் ரூ.21840/—யை தினகரன் நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. முன் அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந .க.எண்.2878/2018/அ1 )</td>
<td><u>தீர்மானம் எண்—826</u><br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..8</td>
<td>இந்நகராட்சி வார்டு எண்.31க்கான 2011 உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் தேர்தலை எதிர்த்து திரு.R.ராஜ்பகதூர் என்பவரால் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.EOP61/2011—ல் வழக்கு தொடர்ந்து வழக்கின் தீர்ப்புரை</td>
<td><u>தீர்மானம் எண்—827</u><br>அலுவலக குறிப்பு ஏற்று</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | கடந்த 17.02.2017–ல் வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்பின் நகலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்பதால் வழக்கறிஞர் திரு.R.வெங்கடேசன் என்பவர் மூலம் நகல் பெற்று அனுப்பி வைக்கப்பட்டது.<br>தீர்ப்புரையின் நகல் பெற்ற கட்டணம் ரூ.3000/– வழங்க கோரியுள்ளார் எனவே திரு.வெங்கடேசன் வழக்கறிஞருக்கு ரூ.3000/–வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.137/2013/சி3 ) | அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..9 | இந்நகராட்சி அலுவலக பொலிரோ ஜீப் TN55-U-5371க்கு பழுதுகள் சீர் செய்யும் பணிக்கு 28.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>வ.எண். \| ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்கள் \| விலை விகிதம்<br>1 \| ஸ்ரீ லெட்சுமி ஆட்டோ சர்வீஸ் ,புதுக்கோட்டை \| ரூ.74,900.00<br>2 \| சவரிமுத்து ஆட்டோ மொபைல்ஸ், புதுக்கோட்டை \| ரூ.82,300.00<br>3 \| ஸ்ரீ அம்மன் ஆட்டோ மொபைல்ஸ், புதுக்கோட்டை \| ரூ.79,250.00<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம் ( ந.க.எண்.43/2018/இ3 ) | <u>**தீர்மானம் எண்–828**</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..10 | புதுக்கோட்டை நகராட்சியின் 2017–2018ம் ஆண்டிற்குரிய கணக்குகள் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவை தயார் செய்யப்பட்டு 02.04.2018ல் உள்ளாட்சி நிதிக்கணக்குகள் துறைக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கணக்கில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய திரு.அ.லெட்சுமணன் என்பர் மூலம் சரி செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு உண்டான செலவினம் ரூ.45,000/– திரு.அ.லெட்சுமணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.1503/2018/பி1 ) | <u>**தீர்மானம் எண்–829**</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..11 | புதுக்கோட்டை நகராட்சியில் குடிநீர் விநியோகம் அனைத்து பொதுமக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளில் மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 37296 ஆக உள்ளது. இதற்கு வரி | <u>**தீர்மானம் எண்–830**</u><br>அலுவலக குறிப்பு ஏற்று |

<table>
<tr>
<td></td>
<td>விதிக்கப்பட்டதன் எண்ணிக்கை 35037.<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் புதிதாக அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கக்கோரி TUFIDCO ல் வட்டியில்லா கடன் ரூ.4.10 கோடிக்கு அனுமதிக்கப்பட்டு 11916 குடியிருப்புகளுக்கு இணைப்புகள் வழங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வை கட்டணம் பெற புதுக்காட்டை மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள்.17.06.2004ல் குடிநீர் விநியோக துணை விதிகள் 310(2) ல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.<br>குடிநீர் பொதுமக்களுக்கு முழுமையான பயனுக்கு கொண்டு வரவும் அதன் பயன் அனைத்து பொதுமக்களுக்கு சென்று அடையவும் வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி சாலைகள் வெட்டப்படுவதை தவிர்க்கவும் மேற்படி நடைமுறைகள் மாற்றிடவும் மேற்கூறிய முன்வைப்புத் தொகை வீட்டு உபயோகத்திற்கு ரூ.2000/–,வணிக பயன்பாட்டிற்கு ரூ,5000/–மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்கு ரூ.3000/–என்று இருப்பதையும் மற்றும் பராமரிப்பு கட்டணத்தையும் 10 தவணைகளில் தவணை முறையில் புதுக்கோட்டை நகராட்சியில் வசூல் செய்ய ஏதுவாக சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்துவரி விதிப்புடன் இணைத்து வசூல் செய்ய ( நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13277/2017/குவ1 நாள்.27.06.2018ன்படி ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.3221/2018/இ3 )</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..12</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் மொத்தம் 37296 வீடுகள் உள்ளது. இதில் வீட்டுவரி / கடைகளின் வரி விதிப்புகள் எண்ணிக்கை 35037 உள்ளது.<br>தற்போது வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் எண்ணிக்கை 19455, வணிக இணைப்புகள் 205ம் உள்ளது. பொதுமக்களுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க புதுக்கோட்டை மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு ( உள்ளாட்சித் துறை அறிக்கை ) 17.06.2004ல் குடிநீர் விநியோக துணை விதிகளில் சேர்த்தல் மற்றும் திருத்தம் செய்ய அறிவிப்பு ( ந.க.எண்.990/1995/இ2 நாள்.3.6.2004ல் ) திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 5வது சட்டம் 310(2)ஆவது பிரிவின்படி அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் குடிநீர் மாதக்கட்டணம் மட்டும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.<br>அதேபோல் புதுக்கோட்டை மாவட்ட அரசிதழ் 18.12.1995ம் ஆண்டு 310(2)பிரிவு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920ன்படி குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><table><tr><td>வீட்டு உபயோகத்திற்கான வைப்புத் தொகை</td><td>ரூ.2000/–</td></tr><tr><td>தொழிற்சாலை உபயோகத்திற்கான வைப்புத் தொகை</td><td>ரூ.3000/–</td></tr><tr><td>வணிக உபயோகத்திற்கான வைப்புத் தொகை</td><td>ரூ.5000/–</td></tr></table>மேலும் 1995க்கு முன் பெறப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு புதிய வைப்புத் தொகை 4 தவணைகளில் வசூல்</td>
<td><u>தீர்மானம் எண்–831</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>குடிநீர் இணைப்புக்கான வைப்பு தொகை 18.12.1995க்கு பிறகு உயர்த்தப்படவில்லை. 23 வருடங்களாக உயர்வு செய்யப்படாமல் உள்ளது. மேலும், குடிநீர் கட்டணம் 14 வருடங்களாக உயர்வு செய்யப்படாமல் உள்ளது. | |

**<u>குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகளுக்கென ஒரு வருடத்திற்கு செலவிடப்படும் செலவு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படும் குடிநீர் கட்டணம் விபரம் ( பழைய அரசாணைப்படி )<br>1000லிட்டருக்கு 4.50 பைசா வீதம் தினசரி 13MLD வீதம் ( 13MLDx4.50/1000 x30 நாள் ) ரூ.18,22,500.00 | | ஆண்டு ஒன்றுக்கு செலவினம் |
| 1 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புதிய அரசாணையின்படி குடிநீர் கட்டணம் மாதம் ரூ.36,45,000/–<br>தினசரி 13MLD x 9.00/1000 லிட்டர் x 30 நாள் ரூ.36,45,000.00 x12 | ரூ.4,37,40,000.00 |
| 2 | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்படும் மின் கட்டணங்கள் ( அம்மையாப்பட்டி நீர் உந்து நிலையம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி நீரேற்று மின் மோட்டார் மற்றும் தரைமட்ட தொட்டி நீரேற்று மின் மோட்டார் மின் இணைப்புகள் , சிறுமின்விசை பம்புகள் மின் இணைப்புகள் ) ஒரு ஆண்டுக்கு | ரூ.62,55,934.00 |
| 3 | 1. குடிநீர் விநியோகம் பராமரிப்பு மற்றும் இயக்குதல் (O&M) Leakage<br>2..கைபம்புகள் பழுது சீர் செய்தல்<br>3.சிறுமின்விசைபம்புகள் மற்றும் பவர் பம்புகள் பழுது சீர் செய்தல் | ரூ.36,00,000.00 |
| 4 | குடிநீர் விநியோக பணியாளர்களுக்கான மாதாந்திர ஊதியம் | 1,16,33,640.00 |
| | **மொத்தம்** | **6,52,29,574.00** |

எனவே, குடிநீர் விநியோகத்தில் வரவைக்காட்டிலும் செலவினம் அதிகமாக உள்ளது.

**<u>வரவினம் விபரம் 5.1.2018 தேதிய நிலவரம்</u>**

| | | |
|---|---|---|
| 1 | குடிநீர் குழாய் இணைப்புகள் வீடுகள் மற்றும் கடைகள் 18361 | ரூ.197.81 இலட்சம் |
| 2 | அரசு அலுவலக கட்டிட இணைப்புகள் 126 | ரூ.1.05 இலட்சம் |
| 3 | குடிநீர் குழாய் இணைப்பு பழுது சீர் செய்தல் கட்டணம் | ரூ.0.75 இலட்சம் |
| 4 | வீட்டு வரி மூலம் ரூ.966.08/16.25 = ரூ.356.67 இலட்சம் | ரூ.356.67 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.556.88 இலட்சம்** |

குடிநீர் கட்டணம் , குடிநீர் விநியோகம் செய்யும்போது வரவைக்காட்டிலும் செலவினம் ரூ.95.41 இலட்சம் அதிகமாக உள்ளது.

எனவே குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை வீட்டு உபயோகம் ரூ.5000/– வணிக உபயோகம் ரூ.10,000/– தொழில் நிறுவனம் உபயோகம் ரூ.7000/– ஆகவும் குடிநீர் கட்டண மாதம் ஒன்றுக்கு ரூ.130/– வீட்டு உபயோகத்திற்கும் ரூ.420/– வணிக உபயோகத்திற்கும் , ரூ.282/–தொழிற்சாலைகளுக்கும் என கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வகை | 18.12.1995 மாதம் முதல் வசூலிக்கப்பட்டு வரும் வைப்த்தொகை | 17.06.2004 முதல் வசூலிக்கப்பட்டு வரும் குடிநீர் கட்டணம் | 1.10.2018முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | வைப்புத் தொகை | மாதாந்திர குடிநீர் கட்டணம் |
| 1 | வீட்டு உபயோகம் | ரூ.2000/– | ரூ.87/– | ரூ.5000/– | ரூ.130/– |
| 2 | வணிக பயன்பாடு | ரூ.5000/– | ரூ.282/– | ரூ.10000/– | ரூ.420/– |
| | தொழிற்சாலைபயன்பாடு | ரூ.3000/– | ரூ.188/– | ரூ.6000/– | ரூ.282/– |

அலுவலக குறிப்பு:-

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1000லிட்டருக்கு ரூ.4.50/– என்பதை ரூ.9/– ஆக மாற்றி உள்ளதாலும் , 23 வருடங்களாக குடிநீர் குழாய் இணைப்பு கட்டணம் கூட்டப்படவில்லை என்ற காரணத்தினாலும், 13 வருடங்களாக குடிநீர் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்ற காரணத்தினாலும் வரவைக்காட்டிலும் செலவினம் அதிகமாக உள்ளதாலும் நிதி நிலைமை கருத்தில்கொண்டு மேற்படி குறிப்பில் தெரிவித்துள்ள குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணம் உயர்வு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.3221/2018/இ3 )

பொருள் எண்..13

